

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்த விழாவில், அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மருத்துவர் மா.மதிவேந்தன், மேயர் ஆர்.பிரியா, எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2025) 'டித்லா' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு, நெருக்கடியில் சிக்கித் தவித்து இன்னலுறும் இலங்கை வாழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பில் உதவிடும் வகையில் சென்னை துறைமுகத்திலிருந்து இலங்கை நாட்டிற்கு இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ள நிவாரணப் பொருட்களை பார்வையிட்டார். இந்நிகழ்வில், சென்னை துறைமுகத்தில், இலங்கை துணைத் தூதர் டாக்டர். கணேசநாதன் கீதீஸ்வரன், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் முருகானந்தம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படை அதிகாரி ரிபர் அட்மிரல் சதிஷ் எம்.செனாய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மதுரை மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேற்று (6.12.2025) மதுரைக்கு வருகைதந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமானநிலையத்தில் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## 5,6766 பேருக்கு வேலைவாய்ப்பு – 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் – இன்று

# மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாடு!

## பல நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் முதல்வர்!

**சென்னை, டிச. 7 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மதுரையில் இன்று (7.12.2025) மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாடு2025 நடைபெறுகிறது.**

**ரூ.36,660.35 கோடி முதலீடுகளுடன் 56,766 புதிய வேலைவாய்ப்புகளுக்கு வழி வகுக்கும் 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன!**

**மேலமடை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள வீர மங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தைத் திறந்து வைக்கிறார்!**

**63,698 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி ரூ.3,065 கோடியில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் !**

**மதுரை மாநகரே விழாக் கோலம் பூண்டுள்ளது.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.12.2025) மாமதுரை திருநகரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்கள். அதனையொட்டி, மதுரை மாநகர் மாபெரும் அளவில் விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

மதுரை மாநகரில் இன்று (7.12.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “தமிழ்நாடு வளர்கிறது” எனும் தலைப்பில் மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாடு 2025 நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் மொத்தம் 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் வாயிலாக 36,660.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளில் 56,766 இளைஞர்களின் புதிய வேலைவாய்ப்புகளுக்கு வழி வகுக்கப்படுகிறது. அத்துடன், மேலூரில் சிப்காட் தொழிற்பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் மதுரை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.18,795 கோடியில் 18,881 வளர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளார்கள்.

மேலும், ரூ.8,668 கோடியில் 96 இலட்சத்து 55 ஆயிரத்து 916 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 27 ஆயிரத்து 463 கோடி மதிப்பிலான பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து, நாளை நடைபெறும் விழாவில் 63 ஆயிரத்து 698 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்கள். மேலும், ரூபாய் 3 ஆயிரத்து 65 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்துப் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்கள். ரூ.150.28 கோடி செலவில் மேலமடை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

இவை தவிர, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் 2.4 லட்சம் சதுர அடியில் 8 தளங்களுடன் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் ரூ.216 கோடி மதிப்பீட்டில் கட்டி 15.7.2023 அன்று திறந்து வைத்துள்ளார்கள்.

ஜல்லிக்கட்டு வீர விளையாட்டுக்கு உலகப் புகழ்ப்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் 16 ஏக்கர் பரப்பளவில் 5 தளங்களுடன் கூடிய மாபெரும் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் கட்டி 24. 1. 2024 அன்று முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் அரசின் சார்பில், 2021க்குப் பின் மதுரை மாவட்டத்திற்கு அனைத்து வகையிலும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

இவைகளை எல்லாம் நினைவில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளபடி, இன்று மதுரைக்குத் தேவைப்படுவது வளர்ச்சி மட்டும்தான் என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளார்கள்!





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கண் சிகிச்சை முகாம் பெருந்தலைவர் காமராஜர் மண்டபத்தில் பகுதி கழக செயலாளர்,மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் நடைபெற்றது.மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் முகாமை துவக்கி வைத்து 500ககும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கினார். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## “அன்னம் தரும் அமுதகரம்” 290 வது நாள்!

### அம்பத்தூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, டிச.7-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 290 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (06.12.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 86, முத்துமாரியம்மன் கோயில் அருகில், குப்பம், 2) வட்டம் 85, அம்பேத்கர் தெரு, ஆசிரியர் காலனி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி. கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர். ஜி சாந்தகுமாரி எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து. ஆயிரம்,*

*ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/ கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீர ராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*